No. of Printed Pages : 7

**3610**

பதிவு எண் | | | | | |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

325444

## (உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம்பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் மிகாது விடை எழுதுக. **3x4=12**

1. நாடகத் தமிழின் சிறப்பியல்புகளாக பரிதிமாற் கலைஞர் கூறுவன யாவை?

2. செம்மொழியின் இலக்கணம் யாது? அவ்விலக்கணம் தமிழ் மொழியின்பால் பொருந்தியிருப்பதனை நிறுவுக.

3. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க. உரைப்பன யாவை?

4. கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு வோர்ட்ஸ் வொர்த், கோலரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை?

5. பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனை விளக்குக.

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக. **3x4=12**

6. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விதந்துரைப்பன யாவை?

7. 'இரந்தும் உயிர் வாழ்தல்' என்று தொடங்கும் குறட்பாவில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை விளக்குக.

8. ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை?

9. தமிழகக் குடைவரைக் கோயில்களைப் பற்றி எழுதுக.

10. தமிழர்தம் மரச் சிற்பக்கலை பற்றி எழுதுக.

III. பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** மட்டும் **இருபது** வரிகளின் மிகாது விடை எழுதுக. **1x6=6**

11. நம் தமிழ் மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

12. தேர்தல் முறைகள் பற்றி மு.வ. எடுத்துரைக்கும் கருத்துகள் யாவை?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. **2x10=20**

13. 'மூக்கப் பிள்ளை வீட்டு விருந்து' சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

அல்லது

'பால்வண்ணம் பிள்ளை' அல்லது 'மகன்' என்னும் சிறுகதையில் இடம் பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'கிழிசல்' அல்லது 'மண்' என்னும் சிறுகதையில் நும்மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

**அல்லது**

சொந்த வீடு கட்டிக் கொள்ளக் கடன் வாங்கி அல்லற்பட்ட இருவர் சந்தித்து உரையாடுவது போல ஒரு கற்பனைக் கதை எழுதுக.

**அல்லது**

படித்து உயர்ந்த கிட்டு ஆதரவற்றோர் இல்லம் ஒன்றைத் தொடங்கி உயரிய சேவை செய்ததாக ஒரு கற்பனைக் கதை எழுதுக.

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச் சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக.

**1x10=10**

தேனினும் தித்திக்கும் சொல்லினாள் - என்னைத்
தேற்றி மகனெனப் புல்லினாள்!
வானில் உயர்ந்து பறந்தவன் - போல்
வந்த வருத்தம் மறந்தனன்!
தெய்வத் தமிழ்மொழிப் பெண்ணவள் - இந்தத்
தேசப் பெருமைக்குக் கண்ணவள்!

வையம் முழுவதையும் வாழ்த்துவாள் - பிறர்
வாழ்ந்திடப் தன்சுகம் தாழ்த்துவாள்!
பற்பல ஆயிரம் ஆண்டுகள் - இந்தப்
பாரில் இருந்தறம் பூண்டவள்!
அற்புதம் இன்னமும் கன்னியே - புது
அழகு தருந்தமிழ் அன்னையே!

- நாமக்கல் கவிஞர்

[ திருப்புக

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக. 3x2=6

16. Strike while the iron is hot.

17. Well begun is half done.

18. Barking dogs seldom bite.

19. Money makes many things.

20. Television is one of the modern wonders of electronics.

21. Rain water harvest is a must to improve ground water level.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் **ஒன்றினை** விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. 1x4=4

(அ) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்

(ஆ) தன் கையே தனக்குதவி

(இ) சிறுதுளி பெருவெள்ளம்

அல்லது

'**விண்முட்டும் மலை**' அல்லது '**வானவில்**' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஏற்ற விடையை எழுதுக.

5x2=10

மக்கள் பொழுது போக்கிற்காக நடத்தும் செயல் வகைகளில் நாடகமும் ஒன்று. அது காண்பவருக்கு வெறும் காட்சியாக மட்டும் இருந்து விடாமல் அறிவுக்கும் இன்பம் தருகிறது. உயர்ந்த படிப்பினைக் கொண்ட நாடகங்கள் ஒரு சமுதாயத்தை மேம்பாடு அடையச் செய்யும். நாகரிகத்தை வளர்க்கும். ஐம்புலன்களின் வாயிலாக அறிவைத் தரும். அன்றாட வாழ்விலுள்ள தீய இயல்புகளின் கொடுமைகளையும் நல்லியல்புகளையும், நலங்களையும் படம் பிடித்துக் காட்டும். நிகழ்காலத்தை ஊடுருவிப்பார்க்கும். இத்தகைய நாடகங்களையே உலகெங்கும் உள்ள மக்கள் வரவேற்கிறார்கள்.

பழங்காலம் முதலே நாடகம் முத்தமிழில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தை முத்தமிழ்க் காப்பியம் என்றும் கூறுவர். இடைக்காலத்தில் நாடகம் சமயச் சொற்பொழிவுக்கு மிகவும் பயன்பட்டது. நாடகத்தைக் 'கூத்து' என்றும் கூறுவதுண்டு. 'கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே' என்பது வள்ளுவர் வாக்கு.

**வினாக்கள்** :

16. நாடகத்தின் சிறப்பியல்பு யாது?

17. நல்ல நாடகங்களினால் கிடைக்கும் பயன் யாது?

18. உலக மக்களால் வரவேற்கப்படுவது யாது?

19. முத்தமிழில் ஒன்றாகக் கருதப்படுவது யாது?

20. இடைக்காலத்தில் நாடகம் எதற்குப் பயன்பட்டது?

21. நாடகத்தின் மற்றொரு பெயர் என்ன?

22. 'கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே' என்று கூறியவர் யார்?

[ திருப்புக

**VIII.** பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

**23.** பூச்செடிகள் தோட்டத்தில் மலர்ந்து மணம் வீசியது.

(வாக்கியப் பிழையைத் திருத்துக)

**24.** வாழை பழத்தை தின்ற பின் தோலை சாலையில் போடாது குப்பை கூடையில் போடு.

(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)

**25.** கபிலப்பரணர் வளர்ப்பிறை ஒளியில் சுடுச்சோறும் காய்க்கறியும் உண்டனர்.

(தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கி எழுதுக.)

**26.** ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது.

(ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக.)

**27.** கரும்புத் தோப்புக்கு அருகாமையில் நாய் கத்தியது.

(மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக.)

**28.** ஒடம்பு வலிக்கு வெண்ணீர் ஒத்தடம் கொடுத்தார்கள்.

(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.)

**29.** இரை - இறை அல்லது காலை - காளை

(சொற்களின் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.)

30. அப்பிசி மாசம் அடமள இம்பாங்க.
(கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.)

31. நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசிர்வதித்தேன்.
(வடமொழிச் சொற்களை நீக்கி இனிய தமிழில் எழுதுக.)

32. சமரசம் வாழ்வில் நுழைந்து ஆட்சிபுரியின் உலகில் போர் ஏது பூசல் ஏது புரட்சி ஏது என்கிறார் திரு.வி.க.
(பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டெழுதுக.)

-o0o-